# இந்துமக்களின் பரம்பல் கலாசார குடிப்புள்ளியியல் நோக்கு

பேராசிரியர். கா.குகபாலன்

## ஆய்வுச் சுருக்கம்

*குடித்தொகைக் கல்வியானது மக்களது வாழ்வியல் பண்புகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. இனம், மதம், மொழி, பண்பாடு போன்றன குடித்தொகைக் கூட்டுப்பகுதிக் குள்ளடக்கப்படுகின்றன. இந்த வகையில் மதம் பற்றிக் கல்வி குடித்தொகைக் கல்வியுடன் நெருங்கிய தொடர்புடையது. இவ்வாய்வானது உலகில் வாழும் மக்களில் ஒரு பகுதியினரால் உள்வாங்கப்பட்டு பின்பற்றிவரும் இந்துமதத்தின் தோற்றம், அம்மதத்தைப் பின்பற்றுபவர்களின் உலகளாவிய பரம்பல் போக்கு மற்றும் இம்மதம் எதிர்நோக்கும் சவால்கள் போன்றன பற்றி விளக்கிச் செல்கிறது.*

இந்துமதம் வேதத்தை ஆதாரமாகக் கொண்ட சமயமாகும். அதற்கு வைதிகம் எனவும் பொருள் கொள்வர். இம்மதம் காலத்தால் முற்பட்டது. ஆதியானது உலக சமயங்களுக்கெல்லாம் முதற் சமயமாகவும் தாய்ச்சமயமாகவும் விளங்கு கின்றது. ஆதிமனிதன் கடவுள் என்ற ஒரு பரம்பொருள் உண்டு என எப்போது உணர்ந் தானோ அப்போதே சைவம் என்னும் நெறியும் உருவாகியது என்பர் இந்துசமயவாதிகள். இதனால் இம்மதம் 25000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனக் கொள்வர்.

இந்து என்ற பதம் சிந்து என்பதிலிருந்து பிறந்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் 'சிந்து' என்ற நதி வடி நிலப்பகுதியை முதலில் சுட்டிக்காட்டியிருந்தபோதிலும் காலப் போக்கில் இந்தியப் பிரதேசத்தையே சுட்டுமளவிற்கு விரிவுபெறலாயிற்று[1] அதாவது இந்து என்ற சொல் காலப்போக்கில் பாரதநாடு முழுவதற் குமுரிய சமய பண்பாட்டு நெறிகளைக் குறிக்கும் பொதுச் சொல்லாக வழங்கப் பெறலாயிற்று. உலகில் உள்ள ஏனைய சமயங்கள் எக்காலத்தில் யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை வரலாற்று மற்றும் அவ்வச்சமய நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. ஆனால் இந்து சமயம் தோன்றிய காலத்தையோ அல்லது தோற்றுவித்தவரையோகணிப்பிட்டுக் கூற வியலாத நிலையினாலேயே இம்மதம் ஆதியும் அந்தமும் இல்லாத சமயம் என்கின்றனர். வட இந்தியாவுக்கு ஆரியர் உள்வருகை கி.மு.1500 ஆண்டுக் காலமாகவிருக்கலாம் எனவும் சிந்துவெளி நாகரிகம் அதற்கு முன்னரேயே காணப்பட்டிருக்கின்றது என ஆய்வாளர் களிடையே எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. எனவேதான் கி.மு. 2400 ஆண்டு களுக்கு முற்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. கி.மு. 1500 – கி.மு. 500ஆம் ஆண்டுக் காலப்பகுதியை வேதகாலம் என்றும் அதற்கு முற்பட்ட காலத்தை சிந்துவெளி நாகரிககாலம் என்றும் வரலாற்றறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இந்நாகரிக காலத்துக்கான கிடைக்கப்பெற்ற தடயங்கள் ஹரப்பா மொகஞ்சதாரோ போன்ற இடங்களில் பெறப்பட்டுள்ளதையும் நினைவு கூரல் சிறப்புடைத்து.[2]

உலகில் எல்லாச் சமயங்களில் உள்ள சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள இந்துசமயம் அதன் உபகூறுகளான அறுவகைச் சமயங்களையும் அவற்றின் உட்பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டு விரிவு

பெற்றுள்ளது. இந்துநதி வடிநிலத்தில் வாழ்ந்த மக்களின் சமயமான இந்து, பரந்த இந்தியா முழுவதும் பரந்து மக்கள் மயப்படுத்தப்பட்டதுடன் காலப்போக்கில் தென்கிழக்காசிய நாடுகளிலும் மேற்காசியா, மற்றும் மேலை நாடுகளிலும் கிளை பரப்பி உலகச் சமயமாக மிளிர்ந்து வருகின்றது. இந்துசமயத்தின் தாயகம் தென்னாசியப் பிரதேசமேயெனினும் உலகின் பல பாகங்களிலும் கிடைக்கப்பெற்றுள்ள புதை பொருள் ஆய்வின் பிரகாரம் உலகில் பெரும்பாலான பிரதேசங்களில் சிவவழிபாடு காணப்பட்டதாகத் தெரியவருகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் கொலராடோ ஆற்றைச் சார்ந்த குன்று ஒன்றில் 10000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஈஸ்வரன் கோவில் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தாலியில் 5000 ஆண்டு பழமை வாய்ந்த சிவலிங்கமும் அலெக்சாந்திரியாவில் 120 அடி உயரமான சிவலிங்கமும் காணப்படுவதாகத் தெரியவருகிறது[3] இவை தவிர சீனா, மெக்சிகோவிலும் சிவவழிபாடு சிறப்புற்றிருந்ததாக புதை பொருளாய்வுகள் தெரிவிக்கின்றன.

## உலகில் மதப்பரம்பல்

மதம் ஒருவனை நல்வழிப்படுத்தும் சாதனம். இதற்கமைய உலகில் வாழும் மக்களில் பெரும்பாலானோர், தமது பாரம்பரிய, மற்றும் விருப்புக்கேற்ப மதங்களைச் சார்ந்தவர்களாக விருக்கின்றனர். அந்த வகையில் உலகில் வாழும் மக்கள் எவ்வவ் மதங்களைச் சார்ந்தவர்கள் என்பதை அட்டவணை 1 விளக்குகின்றது. உலகில் இந்துமதம் ஆதியும் அந்தமும் இல்லாத மதமான போதிலும் தற்போது மக்கள் நேசிக்கும் நிலையில் நான்காவது பெரிய மதமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 1

உலகில் மத அடிப்படையிலான குடித்தொகை 1990 (மில்லியன்)

| மதங்கள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 1. கிறிஸ்தவம் | 1783.8 | 33.1 |
| 2. இஸ்லாம் | 950.7 | 17.7 |
| 3. சமயசார்பற்றவர் | 884.5 | 16.4 |
| 4. இந்து | 719.3 | 13.4 |
| 5. பௌத்தம் | 309.1 | 5.2 |
| 6. நாத்திகர் | 236.8 | 4.4 |
| 7. சினப்பழங்குடிச் சமூகம் | 183.6 | 3.4 |
| 8. புதிய சமயத்தவர் | 140.8 | 2.6 |
| 9. பழங்குடி சமயத்தவர் | 94.0 | 1.7 |
| 10. சீக்கியர் | 18.5 | 0.3 |
| 11. மானிஸ்ட், கன்பூசியஸ் பஹாய், ஜைனர், மற்றும் சிறுமதத்தினர் | 44.0 | 1.0 |
| மொத்தம் | 5385.3 | 100.0 |

ஆதாரம்: **Manorama Year Book 1995**

## இந்துமதத்தவர்களின் பரம்பல் கோலங்கள்

நீண்ட பல காலமாக மக்களை நல்வழிப்படுத்திய இந்துசமயத்தை சார்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் உலகளாவிய பரம்பற் கோலத்தை ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்குதல் சிறப்பானதாகும். (பின்னிணைப்பு – 1 இனைப் பார்க்கவும்)

- வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இந்துசமயம் தழைத்தோங்கிய நாடுகளில் இந்துமக்களின் பரம்பல் (இந்தியத் துணைக்கண்டம்).
- தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்துமக்களின் பரம்பல்.
- குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் I

- **குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துமக்களின் பரம்பல் II**

- **சமகால இடப்பெயர்வுடன் கூடிய இந்துக் களின் பரம்பல்.**

என்பனவே அவையாகும்.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இந்துசமயம் தழைத்தோங்கிய நாடுகளில் இந்துமக்களின் பரம்பல் (இந்தியத் துணைக்கண்டம்).**

ஆதியும் அந்தமும் இல்லாத இந்துசமயமானது காலத்துக்குக் காலம் செழிப்புடனும் சோர்வுடனும் காணப்பட்டிருந்த தாகத் தெரிவிக்கும் ஆய்வாளர்கள் கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்குமிடையில் வாழ்ந்து வந்த வெள்ளைத்தோலுடைய ஒரு சமூகத்தினர் அங்கு இயற்கை மாறுபாட்டினால் பொருளாதார நிலையில் நலிவுறவே ஒரு சாரார் ஐரோப்பா நோக்கிச் செல்ல மறுசாரார் பாரசீகத்திற்குச் சென்றும் அதனைத் தொடர்ந்து ஹைபர் கணவாயூடாக இந்தியாவின் வடமேற்குப் பிரதேசங்களைச் சென்றடைந்தனர் என அறியமுடிகின்றது. இவர்களே ஆரியர் என அழைக்கப்பட்டனர்.[4] இவர்களின் வருகைக் காலத்தில் இந்தியாவில் நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என ஆய்வு செய்வோர் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றனர். இதற்குச் சான்றாக மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களும் ஆரியரின் பழைய பாடங்களான வேதங்களும் சான்றுகளாக வுள்ளன. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் கி.மு. 3000 – 2000 வரையிலானது. எனவே ஆரியரின் வருகைக்கு முன்பிருந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், தெய்வங்கள், கிரியை முறைகள் என்பன ஆரியரினால் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதைக் காணமுடிகின்றது. அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களால் பின்பற்றப்பட்டு வந்த தத்துவஞானங்களையும் அவர்கள் சிறிது சிறிதாக அறியத்தொடங்கினர்.[5] ஆரியர் சமூகம் யாகம் புரிவதிலிருந்தும் தத்துவஞானக் கொள்கையுடையதாக மாறிக்கொண்டும் சைவசித்தாந்தத்தை நெருங்கியும் வரலாயிற்று. இதனை உறுதிப்படுத்துவதற்கு சங்கரர், இராமானுஜர், மாதவர், நீலகண்ட சிவாச்சாரியார் போன்றோரது உரைகள் சான்றாகவுள்ளது.[6]

ஹரப்பா, மொகஞ்சதாரோ தொல்பொருள் ஆய்வின்போது இந்துசமயத்தின் விக்கிரகங்கள், கட்டிடங்கள், கோவில்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர். சேர் ஜோன் மார்சலும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் சிந்துவெளியில் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும் என்கின்றார். சிவபெருமான் தென்முகக் கடவுளாகவிருந்து சனகாதி நால்வருக்கு நான்மறைகளை அருளிச் செய்தார் என்னும் ஐதீகம் இந்துசமயத்த வர்களிடையே தொன்றுதொட்டு நம்பப்பட்டு வருகின்றது. இவ்வைதீகத்திற்கும் சிந்து வெளியில் காணப்பட்ட முத்திரைகளின் வடிவத்திற்கும் மிகநெருங்கிய தொடர்புண்டு. எனவேதான் நான்மறைகளும் ஆகமங்களும் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரேயே இருந்துள்ளன என அனுமானிக்கின்றனர் சமய ஆய்வாளர்கள், இத்தகைய நீண்ட பாரம் பரியத்தைக் கொண்ட சிவனை அக்கால மக்கள் ஆலமர், செல்வன், முக்கண்ணன், பெருந் தேவன் எனப் பல பெயர்கொண்டு வழிபட்டனர். எனவே சிவனே முதலிடம் பெற்று விளங்கினார் என்பதை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தெரிவிக்கின்றன. [7]

இந்தியத் துணைக்கண்டத்தில் வரலாற்றுக் காலங்களில் வாழ்ந்தவர்கள் மற்றும் வெளிப்பிரதேசங்களில் இருந்து உள்வந்தோர்களின் வணக்கத்துக்குரிய சமயமாக விருந்த இந்துசமயம் சோதனைக் குள்ளானது. இந்து மக்களிடையே பௌத்த சித்தாந்தம் முன்வைக்கப்படவே அதில் விசுவாசம் கொண்டு பலர் பௌத்தத்தைத் தழுவினர். இதற்கு அக்கால அரசுகளும் ஆர்வமூட்டும் வகையில் நடந்துகொண்டன. ஆரியர்கள் கி.மு. 322இல் மௌரியப் பேரரசை உருவாக்கினர்.[8] பிரபல்யம் வாய்ந்த மௌரிய அரசனான அசோகன் (கி.மு. 269 – 232) அரச மதமாக பௌத்தத்தை அங்கீகரித்தார். இம்மதம் கி.பி.3ஆம் நூற்றாண்டுவரை சிறப்பிடம் பெற்றிருந்ததாக அறியமுடிகின்றது. இம்மன்னன் காலத்திலேயே இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை உட்பட அயல் நாடுகளிலும் செல்வாக்கினைப் பெற்றிருந்தது. ஆனால் குப்தர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 320 – 550) மன்னர்கள் இந்துக்களாகவும் மக்களில் கணிசமானோர் பௌத்தர்களாகவும் இருந்தனர். காலப்போக்கில் அரசர்கள், வள்ளல்கள், ஆதரவு பௌத்தத்திற்கு குறைந்தபோது பௌத்தம் நிலைகுலையத் தொடங்கவே மீண்டும் இந்துசமயம் தன்னிடத்தைப் பெற்றுக் கொண்டது.[9]

இஃது இவ்வாறிருக்க கி.பி. 711ஆம் ஆண்டு இந்தியாவுக்குள் தற்போது பாகிஸ்தான் நாடாகவுள்ள பிரதேசத்தினை அராபியர் படையெடுத்துக் கைப்பற்றினர். 1325 வரை வட இந்தியாவில் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்தி மக்களில் ஒரு பகுதியினரைத் தம்மதம் சாரவைத்தனர். ஆனால் முகம்மது பின் துக்ளக் (கி.பி. 1325 – 1351) தற்போதைய கேரள மாநிலம் உட்பட தென் இந்தியப் பகுதிகளைக் கைப்பற்றினான். எனினும் அதன் பின்னர் இஸ்லாமியப் பேரரசு பலமிழக்கத் தொடங்கின. இஸ்லாமியர் இந்தியத் துணைக் கண்டத்தை கைப்பற்றிய காலத்திலிருந்து இந்துக்களை விவாகத்தின் வாயிலாகவும் மதமாற்றம் காரணமாகவும் தம்மதம் சாரச் செய்தனர். எவ்வாறெனினும் இந்துசமயத்தை மக்கள் மனங்களிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. எனினும் இஸ்லாமியர் ஆட்சியின்போது ஆப்கானிஸ்தான், பேர்சியா, மத்தியஆசியப் பகுதியிலிருந்து கலாசாரம், இலக்கியம், கட்டிடக்கலை, இராணுவ நடவடிக்கைகளை இந்தியத் துணைக் கண்டத்தில் புகுத்தினர். அதன் பின் மேலை நாட்டினர் இந்துசமயம் தோன்றிய பகுதிகளில் தம்மதங்களைத் திணித்தனர். இருப்பினும் இந்தியப் பெருநிலப்பரப்பில் கிறிஸ்தவம் உள்ளிட்ட மதங்கள் பெருமளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என்றே கூறல்வேண்டும்.[10]

## தென்னாசிய நாடுகளில் இந்துசமயம்

தென்னாசிய நாடுகளில் இந்தியா, நேபாளம், வங்களாதேசம், இலங்கை, பூட்டான், பாகிஸ்தான் ஆகியவற்றில் இந்துசமயம் நிலைபெற்றுள்ள போதிலும் பாகிஸ்தான், வங்களாதேசம் ஆகியவற்றில் இஸ்லாம் மதமும் பூட்டானிலும் இலங்கையிலும் பௌத்தமும் பெரும்பாலான மக்களால் போற்றப்படும் மதங்களாகவுள்ளன. இருப்பினும் இந்துமதம் சார்பு ரீதியாக விருத்திபெற்றுள்ளது.[11]

உலகிலேயே இந்துமதத்தை அரசமதமாக ஏற்று போற்றிவரும் ஒரே நாடு நேபாளமாகும். உலகில் இந்துக்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டாவது நிலையில் உள்ளது. இந்நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 91.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். ஏனையோர் பௌத்தர்களும் இஸ்லாமியர்களுமாவர். பௌத்தர் நாட்டின் வட பகுதியிலும் இஸ்லாமியர் தென் பகுதியிலும் தொட்டம் தொட்டமாக வாழ்ந்து வருகின்றனர்.[12]

உலகில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் நாடு இந்தியாவாகும். இங்கு 1991 ஆம் ஆண்டில் 806.4 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மொத்தக் குடித் தொகையில் 82.4 சதவீதமானவர்கள் இந்துக்களே, இந்நாட்டில் பல்லின, பல மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருவதனால் மதச்சார்பற்ற கொள்கையினை அரசு கடைப்பிடித்து வருகின்றது.

அட்டவணை II
இந்தியாவின் மதப்பரம்பல் 1991 (சதவீதத்தில்)

| மதம் | சதவீதம் |
|---|---|
| இந்துக்கள் | 82.4 |
| இஸ்லாமியர் | 11.7 |
| கிறிஸ்தவர்கள் | 2.3 |
| சீக்கியர் | 2.0 |
| பௌத்தர் | 0.8 |
| ஜயின் | 0.4 |
| ஏனையோர் | 0.4 |
| மொத்தம் | 100.0 |

**Source : Census of India 1991**

இந்தியாவில் நாடு முழுவதும் இந்துக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்ற போதிலும் வட கிழக்குப் பிரதேசங்களிலும் வடக்கே ஜம்முகாஷ்மீர் மாநிலத்திலும் குறைவான பரம்பலைக் கொண்டிருக்கின்றது. ஒரிசா, மத்திய பிரதேசங்களிலும் இமாலயப் பிரதேசத்திலும் இந்துக்கள் செறிவாகவுள்ளனர். இந்தியாவின் குடித்தொகையில் 10.0 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்புக் கருதி அப்போதைய பிரித்தானிய குடியேற்ற நாடுகளுக்கும் 20ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் விருத்திபெற்ற நாடுகளுக்கும் இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். ஆரம்ப காலங்களில் இலங்கை, மலேசியா, பிஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கும் பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.[13]

உலக நாடுகளில் இந்துக்கள் அதிகமாக வாழும் நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை வங்காளதேசம் பெற்றுள்ளது. இங்கு 14.44 மில்லியன் இந்துசமயிகள் வாழ்கின்றனர். நாட்டின் மொத்தக் குடித்தொகையில் முஸ்லிம்கள் 86.6 சதவீதத்தினராகவும் இந்துக்கள் 12.1 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். 1947இல் இந்திய சுதந்திரத்திற்கு முன்னர் வங்காளதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாகவிருந்துள்ளது. பாகிஸ்தானின் ஒரு அலகாக உருவாக்கப்பட்ட பின்னரும் கூட பெருமளவில் இந்துக்கள் இந்தியாவுக்குள் இடம்பெயரவில்லை. தற்போது அந்நாட்டில் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.[14]

இந்தியத் துணைக் கண்டத்தில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் நான்காவது நாடு இலங்கையாகும். 2001ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் 2.8 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்துவருகின்றனர். நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 13.2 சதவீதத்தினராகவுள்ளனர். குடிக்கணிப்புக் குட்படாத மாவட்டங்களில் மாவட்ட செயலகங்களில் கணிப்பிடப்பட்டிருந்த இந்துக் களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு மதிப்பிடப்பட்டது. இலங்கையில் இந்துக்களின் பரம்பல் இந்தியப் பெருநிலத்தின் இந்துக்களின் பரம்பலோடு மிகவும் தொடர்புடையது. அசோக மன்னன் இலங்கையில் பௌத்தத்தை அறிமுகம் செய்த காலத்தில் இந்துக்களே வாழ்ந்திருக்க வாய்ப்புண்டு. காலப் போக்கில் அவர்களில் ஒருசாரார் பௌத்தத்தைத் தழுவிக்

கொண்டனர். பின்னரும்கூட, இந்தியாவின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்வாக்கு இலங்கையின் இந்துக்களின் பரம்பலைத் தீர்மானித்திருக்கின்றன என்பதில் சந்தேகமேயில்லை.19ஆம் 20ஆம் நூற்றாண்டு களில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட இந்தியத் தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாகவிருந்துள்ளனர்.[15] 2001ஆம் ஆண்டு குடித்தொகைக் கணிப்பீட்டின்படி நுவரெலியா மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 52.0 சதவீதமானவர்கள் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.[16] இலங்கையில் இந்துக்கள் அதிகமாக வாழும் மாவட்டம் யாழ்ப்பாணமாகும். இதற்கடுத்து மட்டக்களப்பு, நுவரெலியா, கொழும்பு மாவட்டங்களாகத் தொடர்கின்றன.

அட்டவணை III

இலங்கையில் மதப்பரம்பல் 2001 (சதவீதத்தில்)

| மதம் | சதவீதத்தில் |
|---|---|
| பௌத்தம் | 71.2 |
| இந்து | 13.2 |
| இஸ்லாம் | 7.7 |
| கிறிஸ்தவம் | 7.6 |
| ஏனைய மதங்கள் | 0.3 |
| மொத்தம் | 100.0 |

ஆதாரம்: 1)இலங்கைக் குடிக்கணிப்பு அறிக்கை 2001
2) வடக்கு கிழக்கு மாகாண இந்துக் குடித்தொகை மதிப்பிடப்பட்டவை

இந்தியத் துணைக் கண்டத்தில் பாகிஸ்தானில் 1.6 மில்லியன் இந்துக்களே வாழ்ந்து வருகின்றனர். இது அந்நாட்டின் குடித்தொகையில் 1.1 சதவீதமாகும். இந்நாடு இஸ்லாமியர் படையெடுப்பின் பின்னர் முழுமையாக இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட பிரதேசமாகவிருந்தது ஒருபுறமிருக்க 1947ஆம் ஆண்டு இந்திய – பாகிஸ்தானிய பிரிவினையின் போது கணிசமான இந்துக்கள் இந்தியாவுக்குள் இடப்பெயர்வினை மேற்கொண்டதால் இந் நாட்டில் இந்துக்களின் பங்கு குறைவாக வேயுள்ளது.[17].

பூட்டானில் பௌத்த சமயத்தினரே அதிகமாக வாழ்ந்துவரினும் நாட்டின் குடித்தொகையில் 23.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். இந்தியத் துணைக் கண்டத்திற்கு அண்மையில் உள்ள ஆப்கானிஸ்தானில் இரண்டரை லட்சம் இந்துக்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றுக் காலங்களில் இப்பிரதேசங்களில் இந்துக்கள் வாழ்ந்துள்ளனர். என ஆய்வாளர் கள் கருதுகின்றனர்.[18] தலிபான் ஆட்சியில் பௌத்த சின்னங்களை அழித்துள்ளனர். இஸ்லாமியர் இப்பிரதேசங்களைச் சென் றடைந்த காலங்களில் பௌத்தம் செழுமையா கவிருந்துள்ளது எனவும் முன்னர் வாழ்ந்த இந்துக்களே பௌத்தர்களாகி இருக்கலாம் எனவும் வரலாற்றாய்வாளர்கள் கருத்தாக வுள்ளது.

**தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்துக்களின் பரம்பல்.**

இந்துசமயத்தின் தோற்றுவாய் இந்தியப் பெருநிலமாகவிருக்கின்ற அதேவேளை இம் மதத்தைத் தம்மதமாக ஏற்று அதன் வழி ஒழுகிய மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் சிறப்பாக இந்தோனேசிய தீவுகள் உள்ளிட்ட தென்கிழக் காசியப் பிரதேசம் என்பது வெள்ளிடைமலை. பரந்துபட்ட பூமியில் காலத்துக்குக் காலம் நிலப்பிரதேசங்களை கடல் கொண்டதாக புவியியல் மற்றும் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆசியாவோடு இணைந்த

இந்தோனேசியாவை உள்ளிட்ட பெருநிலப்பரப்பு நாளடைவில் கடல் கொண்டுவிட்டதால் மிகுதிப்பகுதி இன்றைய நிலப்பரப்பாகக் காணப்படுகின்றது. எனவே இப்பிரதேசங்களில் வரலாற்றுக் காலங்களிலிருந்து இந்துக்கள் வாழ்ந்திருக்கலாம் எனவும் அவர்கள் தம் பரம்பரையினரே இந்தோனேசியா உள்ளிட்ட பிரதேசங்களில் வாழ்ந்த, வாழ்ந்துவருகின்ற இந்துக்கள் எனக்கொள்பவர்களும் உளர்.[19] எனினும் தொல்லியலாளர்கள் உட்பட ஆய்வுத் துறையினர் இந்துமதம் இந்தியாவிலேயே தோற்றுவிக்கப்பட்டது என உறுதிப்படத் தெரிவிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக கி.மு.1500 ஆண்டுகளுக்கு முன்னர் ஹைபர் கணவாயூடாக இந்தியாவுக்கு வந்த ஆரியர்களுக்கு அக்காலத்தில் காணப்பட்ட திராவிட நாகரிகம், கட்டடக்கலை , சிற்பக்கலை போன்ற பலவற்றைக் கண்டு அதிசயிக்க வைத்தது எனக் கூறப்படுகின்றது. எனவே இந்தியப் பெரு நிலத்தில் இந்து சமயம் வளர்ச்சியும் விருத்தியும் பெற்றதன் பின்னரே ஏனைய பிரதேசங்களுக்கு விரிவு பெற்றது எனக் கொள்வதே பொருத்தமானதாகவிருக்கும்.[20]

கி.பி. 3 – 5 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் இந்திய வரலாற்றில் மௌரிய குப்த ஆட்சிகள் வட இந்தியாவில் செழிப்புற்ற காலப்பகுதி ளிலும் தென்னிந்தியாவில் சோழர், பாண்டியர் ஆட்சிகள் செழிப்புற்ற காலப்பகுதிகளிலும் கம்போடியா, வியாட்னாம் மற்றும் யாவா, சுமாத்திரா, போர்னியோ, சரவாக், உட்பட இந்தோனேசியாவுக்கும் இந்துக்கள் சென்று குடியேறியுள்ளனர் எனவும் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.[21]

இந்தோனேசியத் தீவுகளில் இஸ்லாமியர் வருகைக்கு முன்னர் இந்துக்களும் பௌத்தர்களும் வாழ்ந்து வந்ததற்கு போதிய சான்றுகள் உள்ளன. ஏறத்தாழ கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பண்பாட்டில் மேலோங்கி யிருந்த இந்தியாவோடும், சீனாவோடும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த நாடு இந்தோனேசியாவாகும். இந்நாட்டு மன்னர்கள் இந்தியச் செல்வாக்கைத் தம் அரண் மனைக்குள் இறுகிப் பற்றினர். கி.பி.முதலாம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து இந்தோனேசியாவுக்கு வந்த இந்து வர்த்தகர்கள் இந்து மதத்தை இந்தோனேசியாவில் பரப்பினார்கள் எனவும் கூறப்படுகின்றது. இந்திய வர்த்தகர்கள் புடவை வகைகளைக் கொண்டு வந்து பண்டமாற்றாக யாவா போன்ற தீவுகளில் விளைந்த நெல்லினை எடுத்துச் சென்றனர் எனவும் யாவா என்ற பெயரைக் கூட இந்தியர்களே இட்டனர் எனவும் அறியக்கூடக்கின்றது.[22]

மிக நீண்ட காலமாக இந்துக்கள் வாழ்ந்து வருவதற்கான வரலாற்றுச் சான்றுகள் இந்நாட்டில் அதிகமுள்ளன. சுமாத்திரா தீவில் தமிழ் நாட்டின் செல்வாக்கு அதிகமாக இருந்துள்ளது. சேர, சோழ, பாண்டிய, கலிங்க மற்றும் மலையாள செல்வாக்கு குறிப்பாக இடப்பெயர்கள் கூட இன்றும் வழக்கிலுள்ளன. அத்துடன் DiengPlateau என்ற இடத்தில் கி.பி.675ல் சிவன்கோவில் கட்டப்பட்டது எனவும் இதுவே மிகப் பழமையான கோவில் எனவும் கூறப்படுகின்றது. சரவாக்கில் ஐந்து பஞ்ச பாண்டவர் கோவில்கள் உள்ளன. அவை திராவிட சிற்பக்கலையை ஒத்ததாக இருக்கின்றது. மேற்கு போர்னியாவில் Sungei Tekatik ஆற்றுக்கரையிலுள்ள கவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் இந்துசமயத்தின் சிறப்பை எடுத்துக்கூறியுள்ளது. 9ஆம் நூற்றாண்டு இறுதிவரை தென்னிந்தியாவில் கட்டப்பட்ட கோவில்களின் சுவர்களில் சுட்ட மண்ணும் சுண்ணாம்பும் கலந்த கலவைத் தன்மையை

இங்கும் காணமுடிகின்றது. எனினும் 10ம் நூற்றாண்டின் பின்னர் இந்துசமயத்தோடு இணைந்த இந்தியத் தொடர்பு குறைவடைய லாயிற்று. [23]

இஸ்லாமியரின் ஆதிக்கம் நிலைபெறவே பௌத்த, இந்துசமயங்கள் தமது நிலையி லிருந்து தளரத்தொடங்கின. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத பௌத்தர்களும், இந்துக் களும் பாலித்தீவிற்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்த இந்துக்களோடும், பௌத்தர்களோடும் இணைந்து கொண்டனர். இவர்கள் இன்றுவரை இந்துதர்மத்தையும் சித்தாந்தத்தையும் பின்பற்றி வருகின்றனர். இத்தீவிலுள்ள பெரியகோவில் திரிமூர்த்தி கோவிலாகும். இங்கு வாழும் மக்கள் இயற்கைப் பொருட்களைக் கடவுளாக எண்ணி வழிபடும் பண்பையும் . காணமுடிகின்றது. இங்குள்ள கோவில்களில் இறைவனின் சிலையோ அன்றில் இறைவியின் சிலையோ இல்லை. உருவ வழிபாட்டினைக் காணமுடியாது. கோபுரங்களோ கற்கூரையால் வேய்ந்த மண்டபங்களையோ காணமுடியாது. மக்கள் ஈஸ்வரன், விஷ்ணு, பிரம்மா ஆகிய தெய்வங்களை வணங்குகின்றனர். மகேஸ்வரன் தான் அவர்கள் போற்றித் துதிக்கும் முழுமுதற் கடவுளாகும். கோவிலின் உட்பிரவாகத்தில் கர்ப்பக்கிரகம் உள்ளது. இதனுள் சிவலிங்கம் மட்டுமே உள்ளது. இக்கற்பக்கிரகம் எப்போதும் பூட்டியிருக்கும். விழாக்காலங்களில் மட்டும் உருவ வழிபாடு நடைபெறுகின்றது. பாலித்தீவில் இந்து மதத்தினை மக்கள் விசுவாசத்துடன் நேசிக்கின்றனர். [24]

உலகில் நான்காவது பெரிய இந்துக்கள் வாழும் நாடு இந்தோனேசியாவாகும். பாலித்தீவில் இந்துக்கள் பற்றி எழுதும் ஆர்வலர்கள் அங்கு 10.0–15.0 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்துவருவதாகத் தெரிவிகின்ற னர். எனினும் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்படும் அறிக்கையில் 2000ஆம் ஆண்டில் 5.2 மில்லியன் இந்துக்களே இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது நாட்டின் மொத்தக் குடித்தொகையில் இந்துக்கள் 2.2 வீதமாகும். இதன் உண்மைநிலையை அறிதல் அவசிய மாகின்றது. [25] பாலித்தீவில் மட்டும் பெரியதும் சிறியதுமாக 4661 கோவில்கள் இருப்பதாக J.S.Swellengrebel என்னும் அறிஞர் கணிப்பிட்டுள்ளார். [26]

தென்கிழக்காசிய நாடுகளில் இந்தோனே சியாவுக்கு அடுத்து அதிக இந்துக்களைக் கொண்ட நாடுகள் பர்மாவும், தாய்லாந்துமாகும். சிறிய எண்ணிக்கையினர் வரலாற்றுக் காலங்களிலிருந்து வாழ்ந்துவரினும் கடந்த நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதிகளில் இந்தியாவில் இருந்து தொழில் தேடிச் சென்றவர்களின் பரம்பரையினரே அதிகம் உளர். பர்மாவில் 7,00,000 இந்துக்களும் தாய்லாந்தில் 1,40,000 இந்துக்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர வியட்னாம், கம்பூச்சியா, பிலிப்பைன்ஸ், புரூணை போன்ற நாடுகளில் எண்ணிக்கையில் குறைவாகவே வாழ்ந்துவருகின்றனர். [27]

**குடியேற்றவாத ஆட்சியும் இந்துமதமும்**

இந்துமதத்தவர்கள் செறிவாக வாழ்ந்து வந்த இந்தியப் பெருநிலப்பரப்பில் காலத்துக்குக் காலம் சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டன. குறிப்பாக முஸ்லீம்களின் உள்வரவினால் இந்துக்கள் மதமாற்றப் பட்டமையைத் தொடர்ந்து மேலைத் தேசத்தவர்களின் உள்வரவினால் கிறிஸ்தவ சமயங்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு பெருமுயற்சியெடுத்தனர். இதன் விளைவாக தென்னாசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா,

இலங்கை நாடுகளில் இந்து, பௌத்தர்களில் கணிசமானோரை தம்மதத்துடன் இணைத்தனர். உதாரணமாக 1620ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் 52,000 மக்களை கத்தோலிக்க மதத்தைத் தழுவச் செய்தனர் என வரலாறு கூறுகின்றது. [28]

**குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் I**

15ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதிகளிலிருந்து மேலைத் தேசத்தவர்களின் நாடுகாண்படலம் ஆரம்பமாகின்றது. இக் காலத்தில் கிழக்காசியப் பிராந்தியத்தில் முஸ்லீம்களின் ஏகபோக வர்த்தகத்தைத் தம்வசப்படுத்தியது மட்டுமல்லாது புதிய நிலப்பகுதிகளையும் சேர்த்துக்கொண்டனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் எனப்பல மேலை நாட்டினர் ஆசியா, ஆபிரிக்கா, வடதென் அமெரிக்கப் பகுதிகளில் புதிய நிலத்தேட்டங்களைத் தேடிக்கொண்டனர். இவர்களின் மூலதாரக் கொள்கையானது கிடைக்கப் பெறும் பொருளாதார வளங்களைப் பெற்றுக் கொள்வதுடன், தாம் சார்ந்த மதங்களைக் கைப்பற்றிய பிரதேச மக்களிடம் புகுத்துவதுமாகும். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட மதங்களில் பிரதானமானவை இந்துவும் பௌத்தமுமாகும். [29]

இவ்வாறான நிலையில் குடியேற்றவாதம் மேலோங்கிக் காணப்பட்ட காலப்பகுதியில் ஆபிரிக்காவிலிருந்து கறுப்பினத்தவர்களை அடிமைகளாக அமெரிக்கர் தமது குடியேற்றங்களுக்கு கொண்டுசென்றனர். 1834ஆம் ஆண்டு அடிமை வர்த்தகம் சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டதன் விளைவாக ஐரோப்பியர் குறிப்பாக பிரித்தானியக் குடியேற்றவாட்சி நாடுகள் பலவற்றில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, கனிப்பொருள் அகழல், பொது வேலைப்பகுதியை விருத்தி செய்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தும் நோக்கில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யக்கூடிய இந்தியர்களைக் கொண்டு சென்றனர். குயானா, சூரினாம், ரினிடாட், டொபொகோ, பிஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளே அவைகளில் சிலவாகும். இவர்களில் கணிசமானோர் காலத்துக்குக் காலம் தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்ட போதிலும் எஞ்சியோர் அவ்வவ் நாடுகளையே தமது தாய்நாடாகக் கொண்டனர். இவ்வாறு அழைத்துச் சென்றவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாவர். சென்ற விடங்களில் தமது பண்பாட்டினைக் கடைப் பிடித்து வந்துள்ளனர். இதன் விளைவாக இந்துமதம் புதிய நாடுகளைச் சென்றடைந்தது எனலாம். குயானா நாட்டுக்கு 1838ம் ஆண்டிலும் டினிரா் டொபோக்கோவுக்கு 1845 இலும் சூரினாம், ஜமேக்காவுக்கு 1873இலும் பிரித்தானியர் இந்துக்களை அழைத்துச் சென்றனர். தற்போது குயானா நாட்டின் குடித்தொகையில் 28 சதவீதத்தினராகவும் டினிராட்டில் 25 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். இவர்கள் காளி, மாரியம்மன், முதலிய கடவுளர்களை வணங்குகின்றனர். குயானாவில் காளியம்மனை வழிபட்டால் அம்மை, கொலரா நோய்கள் தம்மைத் தீண்டாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். [30]

அவுஸ்திரேலியாவுக்கு மிகச் சமீபமாக வுள்ள பிஜித்தீவில் கரும்புத் தோட்டத்தில் தொழில்புரியச் சென்றவர்கள் அந்நாட்டின் அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்திவருகின்றனர். 1990இல் மகேந்திர சௌத்ரி என்ற இந்தியர் பிரதமர் பதவியேற்றதும் அதனைத் தொடர்ந்து சுதேசிய மக்களால் புரட்சிச்சதி மேற்கொள்ளப்பட்டு பதவியிறக்கப்

பட்டதும் அரசியல் வரலாற்று நிகழ்வாகும். 1874இல் பிஜித்தீவைக் கைப்பற்றி 1877இல் கரும்புத் தோட்டங்களை அமைக்கத் தொடங்கவே 1879இல் இருந்து இந்தியர்களை அழைத்துச் சென்றனர். இங்கு 380000 இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர்.[31] இதே போலவே மொரிசியஸ் நாட்டிற்கு இந்துக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களைப் போலவே இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிற்கும் இந்துக்கள் அழைத்துச் செல்லப்பட்ட போதிலும் அவ்வவ் நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக ஒரு பகுதியினர் மீண்டும் தாய்நாடு திரும்பிவிட்டனர். இலங்கையில் 1821 ஆம் ஆண்டு 12.0 சதவீதமாகவிருந்த இந்துக்களின் பங்கு 1901ஆம் ஆண்டு 23.2 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதற்கு இந்தியத் தமிழர்கள் உள்வந்ததே காரணமாகும்.[32]

**குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் II**

குடியேற்றவாத ஆட்சியில் இரண்டாம் கட்ட இந்துக்களின் இடப்பெயர்வானது பெரும்பாலும் இருபதாம் நூற்றாண்டின் முதலரைப்பகுதிகளில் நிகழ்ந்துள்ளது. இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து ஆபிரிக்கா நாடுகளுக்கும் ஏற்கனவே பிரித்தானியரால் அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்கள் வாழும் நாடுகளுக்கும் சிறிய வர்த்தகர்களாகவும் கடைச்சிப் பந்திகளாகவும் தொழில்நுட்பவியலாளர்களாகவும் மேற்பார்வை யாளர்களாகவும் எழுதுவினைஞர்களாகவும் கட்டுமானப் பணியினை மேற்கொள்பவர் களாகவும் கென்யா, உகண்டா, தன்சானியா, போன்ற கிழக்காசிய நாடுகளுக்கும் சயர், மாலாவி, சம்பியா போன்ற மத்திய ஆபிரிக்க நாடுகளுக்கும் கானா, நைஜீரியா, சியராலியோன் போன்ற மேற்காபிரிக்க நாடு களுக்கும் செல்லும் பண்பினை இக்காலத்தில் காணக்கூடியதாயிருந்தது. இவர்களில் பெரும்பாலானோர் குஜராத் மாநிலத்தின் கரையோரப் பிரதேசம் சார்ந்தவர்களே முன்னணியில் இருந்தனர். இவர்கள் காலப்போக்கில் பொருளாதார வலுவுடையவர் களாகினர். இதனால் அவ்வவ் நாடுகளில் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததுடன் தாம் சென்றடைகின்ற பிரதேசங்களில் இந்துக் கோவில்களையும் கட்டினர். உதாரணமாக கென்யாவின் பொருளாதாரத்தில் 20.0 சதவீதத்திற்கு அதிபதிகளாகினர். இவர்கள் நைரோபியில் பிரமாண்டமான சிவாலயா கோவிலையும் 1927ல் இந்துசங்கம் ஒன்றையும் அமைத்து சமயப் பணியினை மேற்கொண்டு வாழுகின்றனர். கென்யாவின் துறைமுக நகரில் 1904ல் சிவாலயா கோவிலையும் அமைத் துள்ளனர்.[33]

இக்காலப் பகுதியில் இடைத்தரத் தொழில்களுக்கு இந்துக்கள் சென்றடைந்த நாடுகளில் சிறப்புற பொருளாதாரத் தேட்டத்தினைப் பெற்றுக்கொண்டதன் விளைவாகப் பல நாடுகளின் அரசுகளும் சுதேச மக்களும் வெறுப்படைந்தனர். பல நாடுகள் அவர்களை வெளியேற்றுவதற்கு சட்டங்களைக் கொண்டு வந்துள்ளனவ ஒருபுறமிருக்க வன்முறைகளின் மூலமும் பொருளாதாரத்தை நலிவடையச் செய்யும் முயற்சிகளும் தொடர்கின்றன. உதாரணமாக உகண்டா, இலங்கை போன்ற நாடுகளில் இவர்களை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குறிப்பிடலாம். இதனால் ஒருபகுதியினர் தாயகம் திரும்ப மற்றொரு கல்வியுடன் கூடிய பொருளாதார வசதி படைத்தோர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டுவருகின்றனர். உதாரணமாக பிஜித்தீவில் 1988ல் நாட்டின்

மொத்தக் குடித்தொகையில் 55.0 சதவீதமாகவிருந்த இந்துக்கள் உட்பட இந்தியர்கள் 1990ல் 45.0 சதவீதமாகக் குறைவடைந்ததற்கு சுதேச மக்களின் கடும் எதிர்ப்பே காரணம் எனலாம்.

**சமகால இந்துக்களின் பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்**

ஐரோப்பியர் தமது குடியேற்றவாத நாடுகளைப் படிப்படியாக இழந்து அந்நாடுகளுக்கு அரசியற் சுதந்திரத்தினை வழங்கிய காலப் பகுதி சென்ற நூற்றாண்டின் பின்னரைப் பகுதியாகும். பின்தங்கிய பொருளாதார வளத்தினைக் கொண்ட இந்து மக்கள் வாழும் தென், தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து பொருளாதாரம், வர்த்தகம், கல்வி, தொழிற்தேட்டம் கருதியும் அரசியல் அடக்கு முறைகளுக்கு பயந்தும் விருத்திபெற்ற மேலை நாடுகளுக்கான இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விடப்பெயர்வு தற்காலிக மற்றும் தற்காலிக நிரந்தர, நிரந்தர இடப்பெயர்வாகவும் பலதரப்பட்ட தன்மைகளைக் கொண்டமைந்துள்ளது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு முறையே 1.8 மில்லியன், 1.2 மில்லியன் இந்துக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.[34] இவர்களில் கணிசமானோர் பொறியியலாளர், மருத்துவர்கள், தொழினுட்ப வியலாளர்கள், விஞ்ஞானிகள், கணனிப் பொறியியலாளர்கள், வர்த்தகர்கள் போன்ற பலதரப்பட்டவர்களாகவுள்ளனர். இதேபோலவே ஏனைய விருத்திபெற்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

உயர்கல்வி, உயர்தொழிலாற்றல் பெற்றவர்கள் உட்பட இடைத்தர மற்றும் ஆரம்பக் கல்வியுடன் கூடியவர்களில் தற்காலிக இடப்பெயர்வு மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து முறையே 25,00,000, 200,000 இந்துக்கள் இந்நாடுகளில் தொழில் செய்து வருகின்றனர். இவர்களது ஒப்பந்தகாலம் முடிவடைய மீண்டும் தமது நாடுகளுக்குத் திரும்பிவிடுகின்றனர். இவ் இடப்பெயர்வு தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் செயற்பாடாகவுள்ளது.

1960களைத் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகள் குடியேற்றவாட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற வேளை அவ்வவ் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, பண்பாட்டு விருத்தியைக் கருத்திற் கொண்டு இந்தியா, இலங்கை, மலேசியா, நேபாளம் போன்ற நாடுகளில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் தொழில்வாய்ப்பைப் பெற அங்கு சென்றனர். அவர்களில் பலர் காலப்போக்கில் தமது பொருளாதாரத் தேட்டத்துடன் மேற்கு ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு நிரந்தர குடியிருப்பாளர்களாகச் சென்று விட்டனர்.

உள்நாட்டு அரசியல் பிரச்சினைகள் தாம் வாழ்ந்த நாடுகளில் இருந்து சர்வதேச நாடுகளுக்கு இடம்பெயர வைத்துள்ளது. பிஜி, இலங்கை, கிழக்காபிரிக்க நாடுகள் போன்றவற்றிலிருந்து விருத்தி பெற்ற நாடுகளுக்கு அரசியற் தஞ்சம் – அதனைச் சாட்டாகக் கொண்டு தொழில் வாய்ப்புப் பெறவெனச் சென்றுள்ளனர். பிஜியில் பூர்வீகக் குடிகளில் நெருக்குதல் காரணமாக அந்நாட்டில் வாழ்ந்து வந்த இந்துக்களில் வசதி படைத்தோர் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு இடப்பெயர்வை மேற்கொண்டுள்ளனர்.

1970களின் பிற்பகுதியிலிருந்து இலங்கையில் இடம்பெற்று வரும் இன விடுதலைக்கான

ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் விளைவாக இந்தியாவுக்கு 160,000 மக்களும் விருத்திபெற்ற நாடுகளுக்கு 600,000 மக்களும் இடப் பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தவிர தொழில்வாய்ப்புக்கருதி ஏறத்தாழ 200,000 பேர் மத்திய கிழக்கு உட்பட பலநாடு களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலா னோர் இந்துக்களே ஆவர் . இவர்கள் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, சுவிற்சர்லாந்து, நோர்வே, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளைத் தெரிவுசெய்து அந்நாடுகளில் தற்காலிக மற்றும் நிரந்தரப் பிரஜைகளாக வாழ்ந்துவருகின்றனர். இலங்கையில் இருந்து அண்மையில் சென்றவர்கள் தாம் சென்றடைந்த நாடுகளில் தொடர்ச்சியாக இந்துமதத்தினைப் பின்பற்றுவ துடன் கோவில் கட்டி திருவிழாக்களைச் செய்து வருகின்றனர். பிரித்தானியாவில் ரூட்டிங்கில் முத்துமாரி அம்மன், விம்பிள்டனில் பிள்ளையார், ஈஸ்ட்காமில் முருகன், மகாலட்சுமி, ஈலிங்கில் துர்க்கையம்மன், லூசியத்தில் சிவன், வோல்தமஸ்டோவில் கற்பகவிநாயகர், பத்திரகாளியம்மன், ஆர்ச்வேயில் முருகன், அல்பேட்டனில் ஈழபதீஸ்வரர், ஸ்ரோன்லியில் இராஜ இராஜேஸ்வரி அம்மன்கோவில்களையும் கனடாவில் முருகன், பிள்ளையார், சிவன், துர்க்கையம்மன், ஐயப்பன் கோவில்களையும் கட்டி வழிபடுகின்றனர்.[35] அத்துடன் நின்று விடாது ஈழத்தில் எவ்வெவ் பிரதேசங்களி லிருந்து சென்றார்களோ அவ்வப்பிரதேசங் களிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களின் பெயர்களை வைத்து வணங்குகின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் இந்தியர்களும் இலங்கையர் களும் தனித்தும் இணைந்தும் கோவில்கள் கட்டி வழிபாடு செய்கின்றனர் இதேபோலவே அவுஸ்திரேலியாவில், சுவிற்சலாந்து, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் ஈழத்தவர் களும் இந்தியர்களும் கோவில்கட்டி பெருவிழாக் கொண்டாடுகின்றனர். குறிப்பாக சீசெல்ஸ் என்ற இந்துசமுத்திரத்திலுள்ள சிறியதீவில் வாழ்ந்துவரும் 300 இந்துக்கள் ஒன்றுகூடி அருள்மிகு நவசக்தி விநாயகர் கோவிலமைத்து கும்பாபிஷேகத்தினை அண்மையில் நடாத்தி மலர் ஒன்றினையும் வெளியிட்டுள்ள னர் என்பது குறிபிடத்தக்கது.[36]

## முக்கியமான நாடுகளில் இந்துக்களின் பரம்பல் - 2000

| நாடுகள் | இந்துமக்கள் | நாட்டின் மொத்தக்குடித்தொகையில் இந்துக்களின் பரம்பல் (வீதம்) |
|---|---|---|
| வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலில் இருந்து சமயம் தழைத்தோங்கிய நாடுகளில் மக்களின் பரம்பல் | | |
| இந்தியா | 806366000 | 76.0 |
| நேபாளம் | 21115600 | 91.0 |
| வங்காளதேசம் | 14435000 | 10.0 |
| இலங்கை | 2817000 | 13.2 |
| பூட்டான் | 493000 | 23.0 |
| பாகிஸ்தான் | 1616000 | 1.1 |

| | | |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 243800 | 0.6 |
| தென்கிழக்காசியப் பிரதேசத்தில் இந்துமக்களின் பரம்பல் | | |
| இந்தோனேசியா | 5225000 | 2.2 |
| பர்மா | 700000 | 1.0 |
| வியாட்னாம் | 4000 | – |
| கம்போடியா | 3000 | – |
| தாய்லாந்து | 140000 | 0.2 |
| பிலிப்பைன்ஸ் | 2000 | – |
| புறூனை | 2000 | – |
| மலேசியா | 1500000 | 7.0 |
| சிங்கப்பூர் | 200000 | 6.0 |
| குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் I | | |
| மொரிசியஸ் | 900000 | 46.0 |
| பிஜி | 380000 | 42.0 |
| தென் ஆபிரிக்கா | 990000 | 2.0 |
| குயானா | 400000 | 37.0 |
| சூரினாம் | 200000 | 28.0 |
| ரினிபிட் மற்றும் ரபோசா | 350000 | 25.0 |
| ஜமேக்கா | 8000 | 25.0 |
| குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துமக்களின் பரம்பல் II | | |
| கென்யா | 70000 | – |
| உகண்டா | 17000 | – |
| தன்சானியா | 20000 | – |
| மடகஸ்கார் | 1000 | – |
| எதியோப்பியா | 2000 | – |
| நைஜீரியா | 20000 | – |
| பொடஸ்சுவானா | 5000 | – |
| சிம்பாவே | 4000 | – |
| மாலாவி | 2000 | – |
| சம்பியா | 10000 | – |
| கானா | 5000 | – |
| சமகால இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் | | |
| ஐக்கிய அமெரிக்கா | 1800000 | – |
| கனடா | 600000 | – |
| ஐக்கியஇராச்சியம் | 1200000 | – |
| ஜேர்மெனி | 40000 | – |

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 50000 | – |
| சுவிற்சலாந்து | 60000 | – |
| அவுஸ்திரேலியா | 80000 | – |
| நோர்வே | 12000 | – |
| நியூசிலாந்து | 40000 | – |
| நெதர்லாந்து | 9000 | – |
| பெல்ஜியம் | 5000 | – |
| ஸ்பெயின் | 15000 | – |
| டென்மார்க் | 5000 | – |
| போர்த்துக்கல் | 15000 | – |
| ருஷ்யா | 10000 | – |
| ஹொங்கொங் | 60000 | – |
| யப்பான் | 5000 | – |
| **இஸ்லாமிய நாடுகளில் இந்துக்களின் பரம்பல்** | | |
| சவுதி அரேபியா | 5000 | – |
| குவைத் | 10000 | – |
| பஃரெயின் | 15000 | – |
| கட்டார் | 5000 | – |
| யூ.ஏ.ஈ | 16000 | – |

Source
1. World Comparative National Statistics
2. Vishwa Mangal Hetavl
3. Encyclopedia Britanica, I.nc p.778.

## அடிக்குறிப்புக்கள்

1. கந்தையாபிள்ளை. க.சி; (1960) இந்துசமயவரலாறு, புரொகிரசிவ் அச்சகம், சென்னை. பக். 2–6
2. இராசமாணிக்கனார். மா; (1955) சைவசமயம், செல்வி பதிப்பகம், காரைக்குடி, பக் 1 – 5
3. குலேந்திரன். பொன்; (2001) சிவயோகம், அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் வெளியீடு, பக். 189 – 193
4. வேலுப்பிள்ளை.ஆ; (1985) தமிழர் சமயவரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை ப. 7
5. மே.கு.நூ; ப. 18
6. Sreenivasa Iyangar P.T; (1958) History of Tamils, Madras, p. 11
7. செல்வராசன். பு; (1955) சங்கநூற் செய்திகள், லோட்டஸ் பப்பிளிஷர்ஸ், சென்னை. பக். 32 – 34
8. Ashok.K; Dutt & Margaret Geib; (1998) Atlas of South Asia, Oxford and IBH Publishing Co.Pvt. Ltd, Calcutta. pp 30-31.
9. Ibid.p 32.
10. வாழ்வியற் களஞ்சியம், பகுதி III; (1983) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் பக் 673 – 674

11. Chandna. R.C; (2000) Geography of Population, Kalyani Publishers; New Delhi, p. 81 - 99
12. Ipid p 87
13. Shankar Rao Tatwawadi; (2000) "Hindus Abroud" Vishwa Mangal Hetave; Uttan, Bharat. PP 115 - 119
14. Ashok.K; Dutt & Margaret Geib (1998), p.33.
15. Kodikara. S.U; (1965) Indo - Ceylon Relations Since Independence,The Ceylon Institute of World Affairs; Colombo. p. 68
16. Census of Population (2001) Department of Censun and Statistics, Colombo - p. 7
17. Chandna. R. C; (2000) p. 87
18. Bhabain Sen Gupta; (1999) Towards a grass - root participatory policy, Himalaya Publishing House , p. 76
19. குருபாதம். க; (1973) 'தென்கிழக்காசியாவில் இந்துசமய வளர்ச்சி', கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்பு மலர், மலேசியா. பக். 71 – 78
20. Ashok.k; Dutt & Margaret Geib (1998), p. 35-36.
21. நித்தியானந்தன் வா; (1973) "இந்தோனேசியாவில் இந்துக் கோவில்கள்" கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா, பக் 161 – 162.
22. விசுவநாதன். ஈ.ச; (1973) " பாலித்தீவும் இந்துசமயமும்" கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா பக் 146 – 151
23. நித்தியானந்தன். வ; (1973) ப. 163
24. விசுவநாதன். ஈ.ச; (1973) பக் 147 – 148
25. World Comparative National Statistics.
26. விசுவநாதன் . ஈ.ச; (1973) ப. 147
27. World comparative National Statistics.
28. Rasanayagam. C; (1933) Ancient Jaffna, Madras, p . 48
29 Shankar Rav Tatwawadi; (2000) p. 117
30. Shri Vasu Vaj; (2000) " Hinduism in America" Vishwa Mangal Hetave, pp. 134 - 137
31. Shri Ravi Iyer; (2000) " Hinduism in Australia Zone" Vishwa Mangal Hetave, pp. 128 - 131
32. Census of Population 1901, Department of Census and Statistics, Colombo.
33. Purushottam Rao. A. E; " Contribution of Hinduism in Kenya", Vishwa Mangal Hetave, pp. 120 - 123.
34. Shankar Raj Tatwawadi; (2000) p. 117
35. குலேந்திரன் பொன்; (2001) ப. 193
36. Sivasubramaniam. V. ; (2002) Decade of Growth, Seychelles Arul Mihu Navasakthi Vinayagar Temple 1992 -2002, P.O.Box. 644, Seychelles, pp 6 - 10.